**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.153/2023
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : ஜான்பீட்டர் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : வேதமுத்து | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of December 2023.

06.12.2023

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர், 5 மற்றும் 6ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக வேறுஒரு வழக்கு சம்மந்தமாக இளஞ்செம்பூர் காவல்நிலையத்திற்கு சென்றிருந்தேன். காவல்நிலையத்தில் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் கேட்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். எதற்கு என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 11.01.2023ம் தேதி இரவு 20.00 மணியளவில் நானும், குழந்தை மகன் ஜான்பீட்டர் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது இளஞ்செம்பூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.153/2023

Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : ஜான்பீட்டர் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : குழந்தை | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of December 2023.

06.12.2023

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர், 5 மற்றும் 6ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக வேறுஒரு வழக்கு சம்மந்தமாக இளஞ்செம்பூர் காவல்நிலையத்திற்கு சென்றிருந்தேன். காவல்நிலையத்தில் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் கேட்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். எதற்கு என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 11.01.2023ம் தேதி இரவு 20.00 மணியளவில் நானும், வேதமுத்து மகன் ஜான்பீட்டர் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது இளஞ்செம்பூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.